10/=


பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

*Ethiroli*

குரல் 02 அதிர்வு 14 திங்கட்கிழமை 14 மே 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18



## தேசியப்பட்டியல் ஆசனத்தை நிராகரித்தார் விக்னேஸ்வரன்?

கொழும்பு, மே 14

நாடாளுமன்றத்தில் தேசியப் பட்டியல் ஆசனத்தை வழங்குவதற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வந்த போதும், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அதனை நிராகரித்து விட்டார் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி 06▶

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் துரித கதியில் ஏற்பாடுகள்

கொழும்பு, மே 14

இலங்கையில் இடம்பெற்ற மிகப் பெரும் தமிழினப் படுகொலை நாளான மே 18ஆம் திகதியினை வழமை போன்று இவ்வருடமும் நினைவுகூருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 06▶

## அரசின் செயற்பாடுகளால் அதிருப்தியில் தமிழர்கள்

சுரேஸ் தெரிவிப்பு



கொழும்பு, மே 14

வடக்கு தமிழர்கள் அரசாங்கத்தின் மீது கடுமையான அதிருப்தியில் உள்ளதாக சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் இனப் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கத்திடம் உறுதியான முடிவுகள் எதுவும் இல்லை. எனவே 06▶

## அரசிலிருந்து விலக ஐ.தே.க.வுக்கு காலக்கெடு



கொழும்பு, மே 14

தேசிய அரசாங்கத்திலிருந்து இரண்டு மாத காலப்பகுதிக்குள் ஐ.தே.க விலகவேண்டும். தவறின் ஐ.தே.க வைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நாடாளுமன்றில் எதிர்க்கட்சி வரிசையில் சுயாதீனக் குழுவாக செயற்படும்.

இவ்வாறு ஐ.தே.க வின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி எச்சரித்துள்ளார். 06▶

## பஸ் கட்டண அதிகரிப்பு அரசுக்கு அவகாசம்

கொழும்பு, மே 14

தனியார் பேருந்து சேவைகளின் கட்டணத்தை 20 வீதமாக அதிகரிக்க வேண்டுமென மாகாணங்களுக்கிடையான தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி குறைந்தபட்ச கட்டணத்தை 10 ரூபாவில் இருந்து 15 ரூபாவாக அதிகரிக்க வேண்டும் எனவும் 06▶

## அன்னையர் தினத்திலும் நீதி கேட்டுப் போராட்டம்



கொழும்பு, மே 14

வவுனியாவில் 444ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அன்னையர்தினமான நேற்று தமது பிள்ளைகள் எங்கே என நீதி கேட்டு கவனயீர்ப்பு ஊர்வலத்திலும், மனிதசங்கிலிப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு 06▶

## காணாமல் போனோருக்கு அரசே பொறுப்பு



மன்னார், மே 14

காணாமல் போனோர் அலுவலகம் மீது நாம் நம்பிக்கை வைக்க வேண்டுமெனில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு படையினரும், அரசுமே பொறுப்பு என்பதனை ஒத்துக் கொள்ளவேண்டுமென காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். 06▶

## எரிபொருள் விலைகள் ஜனவரியில் குறையுமாம்

கொழும்பு, மே 14

எரிபொருட்களின் விலையை எதிர்வரும் ஜனவரி மாதமளவில் குறைக்க முடியுமென நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவது தொடர்பில் பொருளியல் விற்பன்னர்கள் எதிர்வு கூறியிருப்பதற்கு ஏற்ப எதிர்வரும் ஜனவரியில் உள்நாட்டிலும் அதன் பயனை அடையச் செய்விக்கலாம் எனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

## பளையில் ஹெரோயின்

பளை, மே 14

கிளிநொச்சி விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக நேற்றுமுன்தினம் இரவு பளைப் பகுதியில் வாகனத்தில் கடத்தப்பட்ட ஒரு கிலோகிராம் ஹெரோயினுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இப்போதைப் பொருளின் பெறுமதி சுமார் ஒரு கோடி ரூபா என அதிரடிப் படையினர் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களையும் மேலதிக விசாரணைகளின் பின்னர் சான்றுப் பொருளையும் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய உள்ளதாக பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

## அரசாங்கத்தின் கொள்கை தந்திரமான வேலைத்திட்டம்



கொழும்பு, மே 14

நாட்டின் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை ஒரு தந்திரமான வேலைத்திட்டம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர், முன்னாள் அமைச்சர் ஜீ. எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் பிணை முறி மோசடியானது இலங்கையில் 06▶

## ஜனாதிபதி வேட்பாளர் யார்? மகிந்தவே தீர்மானிப்பார்

கொழும்பு, மே 14

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே தீர்மானிப்பார் என அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் பஷில் 06▶

## பொருத்தமானவர் கோத்தாவே!

கொழும்பு, மே 14

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில், ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்சவே 06▶

## 'குறூப் 16'க்கு யார் தலைவர்?

கொழும்பு, மே 14

அரசிலிருந்து வெளியேறிய 'குறூப்16' அணிக்கு எஸ்.பி. திஸநாயக்க அல்லது ஜோன் செனவிரத்ன தலைவராக நியமிக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த குழுவின் பேச்சாளர் கூறுகையில் குறித்த 16 பேர் கொண்ட குழு கூட்டு எதிரணியுடன் இணங்கிச் செயற்படும்.

கூட்டு எதிரணியிலுள்ள ஏனைய கட்சிகளுடன் ஒத்துப் போகும் வகையில் கூட்டு எதிரணியுடன் இணைந்து தமது எதிர்கால . 06▶

## கைதான இலங்கையரை சந்திக்காத அதிகாரிகள்

கொழும்பு, மே 14

மலேசியாவில் எண்ணெய்த் தாங்கி கப்பலில் கைது செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த 131 அகதிகளையும் இலங்கை அதிகாரிகளால் சந்திக்க முடியவில்லை என இலங்கை வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியாவுக்குச் செல்ல முயன்ற போது கடந்த 1ஆம், திகதி 131 இலங்கையர்கள் கடலில் வைத்து மலேசிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர். ஐந்து நாட்களின் பின்னரே அது குறித்த 06▶



## ஈரானில் மைத்திரிக்கு மகத்தான வரவேற்பு

கொழும்பு, மே 14

இருநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஈரான் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட தூதுக்குழுவினர் நேற்றுக் காலை ஈரான் ஜனாதிபதி மாளிகைக்கு சென்றனர். அங்கு அவர்களுக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது

ஜனாதிபதியின் இந்த விஜயத்தின் நோக்கம் ஈரான் மற்றும் இலங்கைக்கு இடையில் பொருளாதாரம் மற்றும் வர்த்தக தொடர்புகளை மேம்படுத்துவதாகும்.

ஈரான் முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடுகள் மேற்கொள்வதை ஊக்குவிப்பது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரி கவனம் செலுத்தியுள்ளார். அந்நாட்டு முதலீட்டு சபை ஏற்பாடு செய்துள்ள முதலீடு மற்றும் வர்த்தக மாநாட்டில் ஜனாதிபதி கலந்து கொள்ளவுள்ளார். (அ)

## இந்தியத் தளபதி இலங்கையில்!

கொழும்பு, மே 14

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் பிபின் ராவத் ஒரு வார காலப் பயணமாக நேற்றுக் கொழும்பு வந்தார்.

இலங்கையில் தங்கியிருக்கும் போது, ஜனாதிபதி, பிரதமர், மற்றும் முப்படைகளின் தளபதிகள், பாதுகாப்பு அதிகாரிகளையும் இந்திய இராணுவத் தளபதி சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

அத்துடன், திருகோணமலை, தியத்தலாவ இராணுவத் தளங்களுக்கும் அவர் பயணம் மேற்கொள்ளவுள்ளார். (அ)

# முகாமைத்துவ சேவையில் 5000 பேர் புதிதாக இணைப்பு

கொழும்பு, மே 14

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் மேலும் ஐயாயிரம் பேர் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

சமீபத்தில் நடைபெற்ற வரையறுக்கப்பட்ட மற்றும் போட்டி பரீட்சையின் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சையின் மூலம் இதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அரச நிர்வாக அமைச்சின் ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் திருமதி கே.வி.பி.எம்.ஜி.கமகே தெரிவித்தார்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் அலரி மாளிகையில் எதிர்வரும் திங்கட்கிழமை காலை வழங்கப்படவுள்ளது. அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளார்.

புதிதாகச் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவோர் மாவட்ட மட்டத்தில் இரண்டு வாரப் பயிற்சி வழங்கப்படும். இதனைத் தொடர்ந்து நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நிலவும் வெற்றிடங்களுக்கு இவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று திருமதி கமகே தெரிவித்தார்.

இவர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவதன் மூலம் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் நிலவிய அனைத்து வெற்றிடங்களும் முழுமைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

## சமுர்த்தி கொடுப்பனவு குறையாது

கொழும்பு, மே 14

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் சமுர்த்தி கொடுப்பனவுகள் எந்த வேளையிலும் குறைக்கப்பட மாட்டாது என்று சமூக வலுவூட்டல்கள் அமைச்சர் பி ஹரிசன் தெரிவித்துள்ளார்.

மேலும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு சமுர்த்தி நிவாரணத்தை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

## வானிலை மாற்றத்தால் கொந்தளிக்கும் கடல்

கொழும்பு, மே 14

மன்னாரிலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக மட்டக்களப்பு வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படுவதுடன் அலைகளின் தாக்கமும் அதிகமாக காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"2018 மே 15ஆம் திகதி வரை மன்னாரிலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக மட்டக்களப்பு வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் 2.0 - 2.5மீ உயரம் வரை அலைகள் மேலெழும். இதன் காரணமாக குறித்து கடற்பரப்புகள் ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படுவதுடன் அலைகளின் தாக்கமும் அதிகமாகக் காணப்படும்.

புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்தீக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்வதற்கான சாத்தியம் காணப்படுகின்றது.

ஏனைய கடற்பரப்புகளில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்வதற்கான சாத்தியம் காணப்படுகின்றது.

புத்தளத்திலிருந்து கொழும்பு ஊடாக காலி வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் சில இடங்களில் பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டைச்சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20 - 30 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 45 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் தற்காலிகமாக கடல் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படுவதுடன் காற்றின் வேகமானது சடுதியாக (மணித்தியாலத்துக்கு 70-80கிலோ மீற்றர் வரை) அதிகரித்து வீசக்கூடும்" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கடும் மழையால் வெள்ளத்தில் காலி!



கொழும்பு, மே 14

நேற்றுப் பெய்த கடும் மழையின் காரணமாக காலி, களுத்துறை மாவட்டங்களின் தாழ்ந்த பிரதேசங்கள் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளதாக இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

மழைநீர் வடிந்து வருவதாகவும் குறிப்பிட்ட அவர் நதிகளின் நீர்மட்டம் அதிகரித்து வருவதாகவும் கூறினார்.

காலி மாவட்டத்தில் நேற்றிரவு முழுவதும் கடும் மழை பெய்திருப்பதாக இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தின் காலி உதவி பணிப்பாளர் லெப்டினன் கேணல் தம்பத் ரத்நாயக்க தெரிவித்தார்.

நேற்றுக் காலை ஆறு மணியுடனான 24 மணித்தியால காலப்பகுதியில் காலி ஜின் தொட்ட பிரதேசத்தில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகி உள்ளது. அங்கு 175 மில்லிமீற்றராகப் பதிவாகி உள்ளது.

காலப்பகுதியில் காலி நகரத்தில் 160 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகி உள்ளது. கோனபீனுவல என்ற பகுதியில் 125 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் ஹக்மீமன பகுதியில் 98 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகி உள்ளது. நேற்றிரவு பெய்த கடும் மழையின் காரணமாக பேருவளை, பாணந்துறை ஆகிய பிரதேச பகுதிகளில் தாழ் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியதாக களுத்துறை மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

ஓடைகள் மற்றும் வடிகான் கட்டமைப்பில் நீர் வழிந்தோடுவது தடைப்பட்டமை இதற்குக் காரணம் என்றும் மத்திய நிலையத்தின் உதவி பணிப்பாளர் கேணல் பிரசாத் ஜயசிங்க தெரிவித்தார். (அ)

## 2 வருடத்துக்கு ஒருமுறை குடிசன மதிப்பீடு

கொழும்பு, மே 14

இரண்டு வருடத்துக்கு ஒருமுறை நாட்டில் வீடுகள் மற்றும் குடிசன மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குடிசன மதிப்பீடு புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அமர சத்ரசிங்க தெரிவித்துள்ளார்.

"பத்து வருடத்துக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும் குடிசன மதிப்பீட்டுக்கு மேலதிகமாக இது மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கமைவாக மே மற்றும் ஜூன் மாதங்களில் வீடு மற்றும் குடிசன மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.

திணைக்கள அதிகாரிகளுக்கு மேலதிகமாக பயிற்சி பெற்ற அதிகாரிகள் சிலர் இந்த இரண்டு மாதங்களிலும் நாட்டிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் விஜயம் செய்வார்கள்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## இன்னும் 20 வருடங்களில் ரயில்துறை அபிவிருத்தி

கொழும்பு, மே 14

இலங்கை, ரயில் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில், எதிர்வரும் 20 வருட காலத்தை இலக்காகக் கொண்டு திட்டமொன்றை வகுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

"இதற்கென 60 கோடியே 50 இலட்ச அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நாளாந்தம் ரயில்கள் மூலம் கொழும்புக்கு வரும் மற்றும் கொழும்பில் இருந்து புறப்பட்டு செல்லும் பயணிகளின் எண்ணிக்கை சுமார் 3° இலட்சமாகும். 2025ம் ஆண்டளவில் இந்த எண்ணிக்கை 12 இலட்சமாக அதிகரிக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

மக்களுக்கு வசதிகளை செய்தி கொடுப்பதற்கான புதிய அபிவிருத்தி திட்டம் ஒன்று தேவையாகும். ரயில் பாதைக் கட்டமைப்பை மேம்படுத்தல், புதிய சமிக்ஞைக் கட்டமைப்பை அறிமுகப்படுத்தல், புதிய தொடர்பாடல் முறையும் இதன்மூலம் பயன்படுத்தப்படும். இந்தத் திட்டத்தை வகுப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 15 இலட்சம் அமெரிக்க டொலரை நிதியுதவியாக வழங்கியுள்ளது" எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ)

எதிரொலி
Ethiroli
திங்கள், 14 மே 2018 ethirolimedia@gmail.com

## முடிந்தும் முடிவில்லை?

தமிழர்களின் விடுதலைக் கனவுக்கு எப்படி முள்ளிவாய்க்கால் பெரும்பொறியாக மாறியதோ, அதே முள்ளிவாய்க்கால் விவகாரத்தைக் கையில் எடுத்து வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிரான பொறியாக மாற்ற எடுத்த திட்டங்கள் பிசுபிசுத்துப் போய்விட்டதாகவே தெரிகின்றது.

கடந்த 3 வருடங்களாக வடக்கு மாகாணசபை முன்னெடுத்து வந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை, இம்முறை பல்கலைக்கழக மாணவர்கள் நடத்தப்போவதாக அறிவித்தது இந்தப் பொறியின் மைய வலை. இதற்கு வடக்கு மாகாண சபை சம்மதித்தால், முதலமைச்சர் ஏனைய தரப்புக்களை ஒன்றிணைத்து, நினைவேந்தலை நடத்துவதில் தோற்றதால் தான் மாணவர்களிடம் அதனைக் கையளித்து விட்டார் என்ற கருத்தைப் பரப்பலாம். மாறாக முதலமைச்சர் முரண்டு பிடித்தது எதிராளிகளுக்கு இன்னும் வசதியாகி விட்டது. தமிழர்களின் விடுதலைக் கனவும், ஆயிரக்கணக்கான மக்களும் கொன்றழிக்கப்பட்ட ஒரு தினத்தைக் கூட ஏனைய தரப்புக்கள் ஒற்றுமையாக நடத்த முதலமைச்சர் இடமளிக்க மறுத்து, சர்வதிகாரப் போக்கோடு செயற்படுகின்றார் என முன்னதைக் காட்டிலும் வீரியம் கூடிய, மக்களின் மேலோட்டமான உணர்வுகளைக் கிளறக்கூடிய, பரப்புரையை முதலமைச்சருக்கு எதிரான தரப்புகள் முன்னெடுத்தன.

பல்கலைக்கழக மாணவர்களின் கருத்துக்களுக்கு, தமிழ் மக்கள் மத்தியில் என்றுமே தனி மதிப்புண்டு. அறிவார்ந்த சமூகத்தின் மத்தியில் எழும் குரல் நிச்சயமாக, பொதுநலனை முன்னிறுத்தியதாக மட்டுமே இருக்கும் என்பதே அதற்குக் காரணம். ஆனால் இம்முறை அந்தக் குரலில் கூட்டு நினைவேந்தல் என்பதை விடவும், முதலமைச்சரின் பெயரை எப்படியாவது மதிப்பிழக்கச் செய்யவேண்டுமென்பதே நோக்கமாக இருந்தது. அதனை மக்களும் உடனடியாகப் புரிந்து கொண்டார்கள். அதனால் இரு தரப்புக்கு இடையிலான அரசியல் மோதலாகவே அவர்கள் பார்த்தனர். இல்லாவிட்டால், பொது அமைப்புக்கள் பல்கலை மாணவர்களுக்கு ஆதரவளித்து, முதலமைச்சரின் வாயை அடைத்திருக்க வேண்டும். அப்படியேதும் நிகழாமையில் இருந்தே பல்கலை மாணவர் ஒன்றியம், ஏதோ ஒரு சக்தியின் கைப்பாவையாக ஆடியமை துலாம்பரமானது.

சரி, முதலமைச்சருக்கு எதிரான இந்தச் சடுகுடுவின் நோக்கம் என்ன? இதற்கான பதில், மிகச் சாதாரணமானதே. வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர், பலமான புதிய கூட்டணியை அமைத்துக் களமிறங்கக் கூடாது என்பதற்கே இத்தனை பிரயத்தனங்களும். வடக்கு முதலமைச்சருக்கு உள்ள ஒரேயொரு பிடிமானம், மக்கள் ஆதரவு மட்டுமே. ஆனால், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் விடயத்தில், ஏனைய அரசியல், பொது அமைப்புகளை ஒன்றிணைக்க விடாமல், தன் சுயநலத்துக்காக முதலமைச்சர் அரசியல் செய்கிறார் என்ற விம்பத்தை மக்கள் மத்தியில் நிலை நிறுத்திவிட்டால், முதலமைச்சர் தலைகீழாக நின்றாலும் வெற்றிபெற முடியாது. எனவே அவருக்குள்ள மக்கள் ஆதரவை, அவர் பதவியில் இருக்கும் போதே இல்லாமல் ஆக்குவதற்கே முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் விடயம், தேவையில்லாமல் ஊதிப்பெருப்பிக்கப்பட்டிருந்தது. இந்த விடயத்தில் எல்லோரும் ஒற்றுமையாக, பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் இணைந்து அஞ்சலிப்பதாக முடிவெடுக்கப்பட்ட பின்னரும், மாணவர் ஒன்றியம் முள்ளிவாய்க்காலுக்கு தனியாகச் சென்று, சில அமைப்புகளைச் சந்தித்து, தாமே அஞ்சலி நிகழ்வைச் செய்யப்போவதாகச் சொல்லியுள்ளனர். அப்படியானால் நேற்று முன்தினம் எதற்காக பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் நினைவேந்துவதாக மாணவர்கள் அறிவித்தனர்? தமது ஆளுகைக்குள் உள்ள பல்கலைக் கழகத்தில் கட்டப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அமைப்பதை நிர்வாகம் தடுத்தமைக்கு, எந்த எதிர் நடவடிக்கையும் எடுக்காத மாணவர் ஒன்றியம், வழக்கமாக நடக்கும் ஒரு நிகழ்வை நாமே நடத்துவோம் என இன்னும் பிடிவாதமாக நிற்பது அவர்களின் பின்னால் உள்ள சுயநல சக்திகளின் முகங்களையே தோலுரித்துக் காட்டுகிறது.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# நண்பர்களின் கிண்டலால் உயிரை மாய்த்த மாணவன்



கொழும்பு, மே 14

நண்பர்களின் கிண்டல்களை தாங்கிக் கொள்ள முடியாத மாணவன் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கம்பஹா அரமங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த லசித தில்ஷான் நிஷங்க என்ற 18 வயதுடைய மாணவனே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார். அவர் 12ஆம் வகுப்பில் விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்றுள்ளார்.

அப்பாவியான தோற்றத்தை கொண்ட இந்த மாணவனை பலர் துன்புறுத்துவதனை வழக்கமாக கொண்டுள்ளனர். கடற்படையில் பணியாற்றிய மாணவனின் தந்தை பணியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

மாணவன் லசிதவின் மூத்த சகோதரர் ருஹூனு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வருகிறார்.

கடந்த 9ஆம் திகதி லசிதவின் பெற்றோர் ராகம வைத்தியசாலைக்கு சென்றுள்ளனர். வீட்டில் லசித மற்றும் அவரது பாட்டியே இருந்துள்ளனர். காலை உணவு பெற்று கொள்வதற்காக பாட்டி லசிதவை அழைத்துள்ளார். இதன் போது லசித ஏதோ புத்தக்கத்தில் எழுதிக் கொண்டிருந்ததனை பாட்டி அவதானித்துள்ளார்.

அரை மணித்தியாலங்களின் பின்னர் மீண்டும் தனது பேரனை அழைக்க சென்ற பாட்டி அதிர்ச்சியான சம்பவம் ஒன்றை பார்த்துள்ளார்.

புத்தகத்தை மேசை மீது வைத்து விட்டு லசித் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதனையே பாட்டி அவதானித்துள்ளார்.

வைத்தியராகும் கனவில் இருந்த லசித் சாதாரண தர பரீட்சையில் 9 ஏ சித்திகளைப் பெற்றிருந்த நிலைமையில் உயர்தரத்துக்கு விஞ்ஞான பிரிவை தெரிவு செய்துள்ளார்.

தூக்கிட்ட மாணவனுக்கு அருகில் இருந்த புத்தகத்தில் சில முக்கிய விடயங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதில் " வகுப்பறையில் யாரும் எனக்கு ஒன்றும் கூறவில்லை. ஒருவருடன் பேசினால் என்ன நடந்து விடப் போகின்றது. நான் தான் வேண்டும் என்று பேசியதாக எனக்கு தொல்லை கொடுக்கின்றார்கள். நான் எந்தத் தவறும் செய்யவில்லை. சத்தியமாக எனக்குப் படிக்க விருப்பம் இல்லை. நான் ஒன்றும் செய்யவில்லை. எல்லோரும் என்னை மன்னித்துவிடுங்கள்.

"எனது தொலைபேசியை அக்காவுக்கு கொடுங்கள். எனது Bio Free Cardia பிரதீப் என்பவருக்கு கொடுங்கள்" என இது போன்ற பல குறிப்புகளை அவர் தனது புத்தக்கத்தில் எழுதியுள்ளார்.

## ராஜஸ்தான் அபாரம்

பட்லரின் பட்டாசுத் துடுப்பாட்டத்தாலும், மும்பையின் பொறுப்பற்ற ஆட்டத்தாலும் 7 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியும், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியும் மோதின. முதலில் மும்பை அணி துடுப்பெடுத்தாடியது.

மும்பை அணிக்கு சூர்ய யாதவும், லெவிஸும் அபார தொடக்கத்தைக் கொடுத்தனர். ஆனால் இருவரின் இணைப்பாட்டத்தையும் ஆர்ச்சேர் முடிவுக்கு கொண்டுவந்து சூர்ய யாதவை வெளியேற்றினார். அடுத்த பந்திலேயே அடித்தாடமுற்பட்ட மும்பை அணித்தலைவர் ரோஹித்தும் வீழ்த்தப்பட மும்பையின் வீழ்ச்சி தொடங்கியது. லெவிஸ் அரைச்சதம் கடந்த பின்னர் விக்கெட்டைப் பறிகொடுத்தார். பின்னர் வந்தவர்களில் ஹர்திக் பாண்டியாவைத் தவிர வேறெவரும் பொறுப்போடு விளையாடததால், 168 ஓட்டங்களையே 20 ஓவர்கள் நிறைவில் மும்பை அணியால் பெறமுடிந்தது. சூர்ய யாதவ் 38, லெவிஸ் 60, ரோஹித் 0, இஷான் கிஷான் 12, குருனல் பாண்டியா 3, ஹர்திக் பாண்டியா 33, கட்டிங் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ஆர்ச்சேர் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

பின்னர் பட்லர் பலமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்த அவருக்குப் பக்கபலமாக ரஹானேயும், சஞ்சு சாம்சனும் போட்டுத் தாக்க, சுலப வெற்றியை ராஜஸ்தான் அணி பெற்றது. ஜோஸ் பட்லர் ஆட்டமிழக்காது 94 ஓட்டங்களையும், ரஹானே 37, சாம்சன் 26 ஓட்டங்களை எடுத்தனர். ஆட்ட நாயகனாக மீண்டும் ஜோஸ் பட்லர் தெரிவானார். இதன் மூலம் அடுத்த சுற்று வாய்ப்பை ராஜஸ்தான் தக்கவைக்க, மும்பை அணி வெளியேறும் நிலையை அடைந்தது.(அ)

# தானம் கொடுக்கச் சென்ற பெண்மீது தனது விளையாட்டை காட்டிய பிக்கு



கொழும்பு, மே 14

விகாரைக்கு தானம் கொண்டு சென்ற பெண்ணொருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் தேரர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவின் பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் முன்னணி செயற்பாட்டாளரான சீகிரியே தம்மிந்த தேரரே கைது செய்யப்பட்டவராவார்.

இந்த பிக்கு இதற்கு முன்னரும் பெண்ணொருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக் கொண்டதால், நீதிமன்றத்தினால் கடுமையாக எச்சரிக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர் என தெரிய வருகிறது.

இந்த சம்பவம் கடந்த 2016 ஆம் ஆண்டு நடந்துள்ளதுடன் அப்போது அவர் தம்புள்ளை பிரதேச சபையின் உறுப்பினராக இருந்துள்ளார்.

மகிந்த ராஜபக்ச அணியில் அங்கம் வகித்த காரணத்தினால், கிடைத்த அரசியல் ஆதரவைப் பயன்படுத்தி, நாகலவெவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்து அங்கிருந்த பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளார்.

இதன் பின்னர் தனது அரசியல் பலத்தை காட்டி அடிக்கடி அந்த பெண்ணின் வீட்டுக்கு சென்று பெண்ணின் கணவனை திட்டி, தொடர்ந்தும் பெண்ணை வல்லுறவுக்கு உட்படுத்தி வந்துள்ளார்.

மிகவும் வறிய நிலையில் வாழும் இந்த குடும்பத்தினர் காவி உடைக்கு கொடுக்கும் மரியாதை மற்றும் தேரரின் அரசியல் பலத்தின் மீதுள்ள அச்சம் காரணமாக பொறுமையாக இருந்துள்ளனர். பிக்குவால் தொடர்ந்தும் கொடுக்கப்படும் தொல்லை தாங்க முடியாது அது குறித்து சீகிரிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தம்மை தொந்தரவு கொடுக்காது வாழ விடுமாறு பிக்குவிடம் கூறுமாறு இந்த குடும்பத்தினர் பொலிஸாரிடம் கூறியுள்ளனர்.

ஏன் அப்படி கூறுகிறீர்கள் என பொலிஸார் கேட்ட போது, சம்பவங்கள் குறித்து குடும்பத்தினர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து பொலிஸார் பிக்குவை கைது செய்து தம்புள்ளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட பிக்கு, தனது குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளதுடன் நீதிமன்றம் கடுமையாக எச்சரித்து பிணையில் விடுவித்துள்ளது.

இந்த நிலையில், சீகிரிய -நாகலவெவ பிரதேசத்தை சேர்ந்த 46 வயதான மூன்று பிள்ளைகளின் தாய், கடந்த ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி மதியம் தானத்தை எடுத்துக்கொண்டு கிராமத்தில் உள்ள விகாரைக்கு சென்றுள்ளார்.

அப்போது சந்தேக நபரான பிக்கு அந்த பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளார்.

இது சம்பந்தமாக பெண் சீகிரிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன்பொலிஸார் பிக்குவை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்ப் படுத்தியுள்ளனர்.

பிக்கு இதற்கு முன்னர் இதே குற்றத்தை செய்துள்ளதை கவனத்தில் கொண்டு அவரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## இன்று நாளும் கோளும்

14.05.2018 திங்கட்கிழமை விளம்பி வருடம் சித்திரை மாதம் 31 ஆம் நாள்

சதுர்த்தசி பி.ப. 07.32 வரை | அசுபதி மு.ப. 11.57 வரை | குளிகை மு.ப. 01.30-03.00
இராகுகாலம் 07.30- 09.00 | சுபநேரம் காலை 06.00 - 07.00 | எமகண்டம் 10.30 - 12.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| செலவு | தடங்கல் | நட்பு | வரவு | கவனம் | அமைதி | வீம்பு | நன்மை | போட்டி | பரிசு | நஷ்டம் | மகிழ்ச்சி |

# கலை அழியாது



இசை நாடகத் துறையில், குறிப்பாக சிந்து நடைக் கூத்தில் கடந்த 40 வருடங்களாகச் செயற்பட்டு வரும் சிறுப்பிட்டியைச் சேர்ந்த கலைவாரிதி, கலைமாமணி, சிந்துநடை வாரிதி முதலான பட்டங்கள் வழங்கிக் கௌர விக்கப்பட்டுள்ள அண்ணாவியார் சின்னத்தம்பி சண்முகசுந்தரம் அவர்களை எதிரொலிக்காக நேர்கண்டோம்.

**சந்திப்பு : இயல்வாணன்**

கேள்வி: காத்தவராயன் சிந்து நடைக் கூத்தினை கடந்த 40 ஆண் டுகளாக நடித்து வருகிறீர்கள். பல வருடங்கள் அண்ணாவியம் செய் துள்ளீர்கள். இந்தத் துறையில் எவ் வாறு ஆர்வம் ஏற்பட்டது?

பதில் : சிறுப்பிட்டி கல்வியிலும் கலைகளிலும் சிறந்து விளங்கிய கிரா மம். எனது மூதாதையர் சி.வை.தாமோ தரம்பிள்ளை தமிழுக்குத் தொண்டாற் றிய பெருமகனாவார். நாங்கள் இன்று இருக்கிற காணியில்தான் சி.வை.தாமோ தரம்பிள்ளை வாழ்ந்தார். அதனால் இந்த இடத்தில் நினைவுத் தூபி அண்மை யில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. எனவே, அந்த வழியில் வந்த எங்களிட மும் இயல்பாகவே கலையுணர்ச்சி உள்ளது. நாங்கள் விவசாயத்திலேயே ஈடுபட்டு வருபவர்கள். தோட்ட வேலை கள் இல்லாத காலங்களில் நாடகம் நடிப்பதில் இருந்து எங்களது ஆர்வம் உருவானது. ஆரம்பத்தில் ஊரில் நண் பர்கள் நடித்து மேடையேற்றினோம்.

கேள்வி : காத்தவராயன் கூத்தினை யாரிடம் முறைப்படி பயின்றீர்கள்?

பதில் : மாவிட்டபுரத்தைச் சேர்ந்த வே.மார்க்கண்டு என்பவரிடமே காத்த வராயன் கூத்தை முறையாகப் பயின் றோம். நீண்ட காலமாக அவரது அண் ணாவியத்தில் நாங்கள் நடித்தோம். 1978ஆம் ஆண்டு அவரது அண்ணாவி யத்தில் நுணாவிற்குளம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் முதன் முதல் மேடையேற்றினோம். தொடர்ந்து பல ஆலயங்களிலும் மேடையேற்றி உள் ளோம். என்னுடன் க.வயிரமுத்து, க.பஞ் சாட்சரம், சி.குமாரசாமி, ச.தங்கேஸ் வரன், இராசரத்தினம், சிவமூர்த்தி, தவக்குமார் எனப் பலர் அவ்வேளை நடித்தார்கள்.

கேள்வி : ஆலயங்களில் மட்டுந் தான் காத்தவராயன் மேடையேறி யதா? எங்கெங்கு மேடையேறி யது?

பதில் : ஆம். காத்தவராயன் கூத்து ஆலயங்களில் மேடையேறுவதுதான் வழமை. அந்த வகையில் நுணாவிற் குளம் கண்ணகை அம்மன் கோவில், நுணாவில் முருகன் கோவில், மீசாலை முருகன் கோவில், பத்தமேனி பிள்ளை யார் கோவில், மட்டுவில் வைரவர் கோவில், கரவெட்டி சின்னம்மன் கோவில், சிறுப்பிட்டி பூதராயர் கோவில், நுணா வில் வீரபத்திரர் கோவில் ஆகியவற்றில் மேடையேறியுள்ளோம். பல ஆலயங்க ளில் பல தடவைகள் மேடையேற்றப் பட்டுள்ளது. சிறுப்பிட்டிப் பூதராயர் ஆலயத்தில் வருடாந்தம் பங்குனி மாதத்தில் நடைபெறும் பெரும் பொங் கலிற்கு முதல் இரவில் காத்தவராயன் கூத்து நடைபெறும். அதிகாலையில் கூத்து முடிந்த பின்னர் பொங்கல் இடம்பெறுவது வழமையானது.

கேள்வி : நீங்கள் எப்போது அண் ணாவியத்தில் ஈடுபட்டீர்கள்?

பதில் : நாங்கள் சி.வை.தாமோதரம் பிள்ளை கலா மன்றம் என்ற பெயரி லேயே காத்தவராயன் கூத்தினை மேடை யேற்றி வந்தோம். அப்போதும் திரு.



வே.மார்க்கண்டு அவர்களே அண்ணாவி யாராக இருந்தார். அவரால் இயலாது போன பிறகு நான் அண்ணாவியம் செய்தேன். எனது அண்ணாவியத்தி லும் பலர் நடித்துள்ளனர்.

கேள்வி: இப்போது தொலைக்காட்சி வந்து விட்டது. இதனால் கூத்தி னைப் பார்ப்பதில் ஆர்வம் குன்றி விட்டது என்று கூறப்படுகிறது. இது பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

பதில் : தொலைக்காட்சி ஒரு பிரச் சினை என்பதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் கிராமங்களில் காத்தான் கூத் துக்கு ரசிகர் இன்றும் உள்ளனர். வருடா வருடம் நடைபெறும் காத்தவ ராயன் கூத்தினைப் பார்க்க வெளியூர் களில் இருந்தும் வந்து விடிய விடிய விழித்திருந்து ரசிப்பார்கள். இது ஒரு தெய்வம் சார்ந்த விசயம் என்பதால் இதில் நடிப்பதற்கும் பிள்ளைகள் தயா ராகவே இருக்கிறார்கள்.

கேள்வி : ஒரு மேடையேற்றம் செய் வதில் எதிர்கொள்ளும் பிரச்சினை கள் யாவை?

பதில் : பல பிரச்சினைகள் உள்ளன. உடைகள், ஒப்பனை, மேடையமைப்பு, ஒலி ஒளி வசதி, சீன்கள் போடுதல் என்று பல விடயங்கள் உள்ளன. இவற்றையெல்லாம் செய்வதற்கு பணச் செலவு அதிகம். அதற்கு அப்பால் நடி கர்களுக்கு ஊக்கத் தொகை எதனையும் பெற முடியாது. எனவே, ஒரு பற் றோடும், ஈடுபாட்டோடும் இந்தக் கலையை அழிய விடக் கூடாது என்ற உணர்வோடுமே நாம் செயற்பட்டு வரு கிறோம். இதனைச் செய்வதால் ஆத் மார்த்தமான திருப்தி உண்டாகிறது. எமது பூதராயர் ஆலயத்தில் வருடா வருடம் இதனைச் செய்யாது விட் டால் ஏதோ குறை போலவே உணருகி றோம். அதனால் தொடர்ந்தும் செலவு களை அண்ணாவியார், நடிகர்கள் இணைந்து வழங்கியே கூத்தினை மேடை யேற்றுகிறோம். அவ்வப்போது கிடைக் கும் பாராட்டுக்களும், ரசிகர்களின் ஊக்குவிப்புமே எமக்கான சன்மானமா கும்.

கேள்வி : உங்களுக்குப் பின்னர் இதனை முன்கொண்டு செல்ல உங்களது பிள்ளைகள் தயாராக உள்ளனரா?

பதில் : ஆம். எனது மகள் செல்வ நிதி, மகன் சயந்தன், பேரப்பிள்ளைகள் விஷ்ணுஜன், லவிசாந், அஸ்மிதா, திருஷ் டிகா ஆகியோர் காத்தானாகவும், பால காத்தானாகவும், அம்மனாகவும், ஆரி யப்பூமாலையாகவும் நடித்துள்ளனர். பிற்பாட்டு பாடியுள்ளனர். அவர்கள் இதனை முன்கொண்டு செல்வார்கள். அதுபோல எனது உறவினர்களும் இதனைச் செயற்படுத்த ஆர்வமாக உள் ளனர். ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ்வொருவர் நடித்து வந்துள்ளார்கள். எனவே, இந்தக் கலை அழியாது.

# வண்ணத்திக் கனவுகள்



நிறைந்த அமாவாசை
கொடிய பல கனவுகளை
நனவாக்கிச் சென்றிருக்கிறது.
கரிய இருளில்
காதுகள் கூட கேட்கவில்லை
கனவுகள் மீதேறிப் பயணிக்க
கண்களுக்கு என்ன தேவை?
மனம் தான் மாளிகையென
மகிழ்வைத் தேடி
சிறகைத் துடிப்பாக்கிப்
புறப்பட்டது இணையுடன்
வண்ணத்தி ஒன்று.
வண்ண வண்ண நிறங்களை
அணிந்து விளையாடின.
காற்றிலும் மழையிலும்
கருத்தோடு சிறகசைத்தன
எவரையும் அழைக்காமல்
துயர் கொண்டாடாமல்
நெடுந்தூரம் பயணித்தன.
தூரம் ஒரு பொருட்டாயில்லை
தேவை நிறைந்ததாயுமில்லை
ஆக,
வீரமிகு வண்ணத்தி
அமாவாசைக் கனவொன்றில்
கூட்டுப் புழுவாய் மாறியிருந்தது.

**யாழினி யோகேஸ்வரன்**






**சித்தாந்தன்**

1.
இந்தத் தெருவில் மனிதர்கள் யாருமில்லை
கொண்டைக் குருவிகளின்
உதிர்ந்த சிறகுகளின் மேலாய்
சிலிர்க்கின்றது பூனையின் மேனி.
நான் கூட
உரோமங்கள் புலுண்டி மணக்க
தெருவைப் புறக்கணித்துத் திரும்பி விட்டேன்.
ராஜகிரீடமே மண்டையோடாகிய பிறகு
பின்னிரவில் பூனைகளின் உறுமல்
அழகிய சங்கீதமெனவாயிற்று.
உறக்கம்
துயில் மறந்தவர்களின் நினைவுகளில்
மணக்கின்றது உலராப் பிணமாக.
சம்பிரதாயமான ஒலிகளைப் பெயர்த்தபடி
விடிகின்றன காலைகள்.
தெருவெங்கும் பூனைகளின் முள்மயிர்கள்.

2.
இன்று பூனைகளை
அழைத்து வந்தது காற்று.
நினைவுகளின் ஒளி மங்கிச் சரிகையில்
பூனைகளின் சரீரம் வளர்ந்து
வானளாவிற்று.
பூனைகளைப் பற்றிய
பூர்வாங்கக் கதைகளில்
எலிகள்
அற்பமான ஜந்துகள்.
உடைந்த பாற்சட்டிகள்
எஞ்சிய ஞாபகங்கள்.
பூனைகள் மேயும் சஞ்சார இரவுகளில்
புணர்ச்சியின் அசைவுகளை உறிஞ்சியபடி
அவற்றின் விகாரமான குரல்கள்.
சர்வமும் பூனைகளாகி விட்டபின்
பூனையே சரணம்! சரணம்!


3.
நிர்ச்சலனத்தில் தொடங்கும்
நள்ளிரவுகளின் கருமையை
தம் நகங்களால் சுரண்டுகின்றன பூனைகள்.
இரவு பாலாகப் பெருகி
வழிந்தோடும் பிரளயப் பொழுதில்
காமமே மேலான வழிகளை உருட்டிய படியே
தேவதைகளின் படுக்கைகளைத்
தேடியலைகின்றன.
கொடியில் தொங்கிய
உள்ளாடைகளைக் கவர்ந்து வந்து
மோகித்து உருவழிந்து தெருவின் முடுக்குகளில்
மறையும் பூனைகளின் அனுக்கத்தால்
பாதைகள் தூர்ந்து போகின்றன.
பின்னெல்லாம்
“தேவதைகளே
உள்ளாடைகளற்று அலைக” என
வேதம் ஓதுகின்றன
சாத்தானின் வேதம்.

(தொடரும்)

# ரணிலால் முடியும்

## மங்கள நம்பிக்கை





கொழும்பு, மே 14


2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் களமிறக்கக்கூடிய தகுதியான வேட்பாளர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே என நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்டத்தில், ஐக்கிய தேசியக் கட்சி யின் சார்பில் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவான உறுப்பினர்களுடனான சந்திப்பில் பங்கேற்று கருத்த வெளியிட்ட அவர்,

"ஒன்றிணைந்த எதிரணியைச் சேர்ந்த சிலருக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமத்துவத்தில் மாற்றம் தேவை. ஆனால் அது நகைப்புக்குரிய விடயம்.

1980 களில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவை பதவி விலகுமாறு அநுர பண்டாரநாயக்க வலியுறுத்தியிருந்தார். எனினும் அந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீமாவோ கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து விலகவில்லை. அது பதவி ஆசையில் அல்ல, கட்சியைச் சரியான தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற எண்ணம்தான்.

1998 - 99 காலப்பகுதியில் சந்திரிகா குமாரதுங்க இரண்டாவது தடவையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சந்தர்ப்பத்தில், "ரணிலுக்கு முடியாது" என்ற தலைப்பில் சுவரொட்டிகளை நானே ஒட்டினேன். காரணம் அந்தச் சந்தர்ப்பத்தில் எமக்கிருந்த சவால் ரணிலே, அவரால் முடியுமென நாம் நம்பினோம். அதனாலேயே நாங்கள் சுவரொட்டிகளை ஒட்டினோம்" எனக் குறிப்பிட்டார். (அ)



## வாத்திமாற்றை ஒழுக்கக்கேடுதான் வேறை ஒண்டும் இல்லை?

"நயக்கெட்ட" சமூகமாப் போச்சு எங்கடை சமூகம். என்னெண்டு நிமித்தப்போறமோ தெரியாது. கண் கண்ட ஆக்களிட்டை எல்லாம் கேட்டன். ஆரும் சரியா ஒரு மறுமொழியைச் சொல்லமாட்டினம் எண்டிட்டினம். இதை நான் ஆரிட்டைச் சொல்லி ஆறுறது எண்டு தெரியேல்லை – எண்டு முதலி அன்னம்பாறிக்கொண்டு வந்தார்.

அது சரி நான் "வயக்கெட்டது" எண்டு கேள்விப் பட்டிருக்கினம். அதென்ன இப்ப புதுசா "நயக்கெட்டது" எண்டு எனக்கு விளங்கேல்லை எண்டன். அண்ணை மெலிஞ்சா வயக்கெட்டதென்பம். ஒரு வித லாபம் அதாவது நலன் இல்லாத விசியம் எண்டால் "நயக் கெட்டது" எண்டு சொல்லுவம். எப்பிடி என்ரை ஐடியா எண்டு முதலி எனக்கு வடிவேலு பாணியிலை கதைச் சார். இப்ப முதலியை நான் அவன் எண்டு சொல்லுறேல்லை. இப்ப அவர் கான்போன் வாங்கினப் பிறகு அவர் ஒரு அறிவுப் பிராணியா எனக்குத் தெரியிறதாலை அவரை இப்ப "அவர்" எண்டு ஒரு சின்ன மரியாதை வைச்சுத்தான் கதைக்கிறனான்.

காலமை முதலி சங்கடப்பட்ட விசியத்துக்கு வருவம். இண்டைக்கு ஒரு சிங்களப் பெடி அவனோடை படிக்கிற ஆக்கள் அடிச்ச நக்கல் தாங்காமல் தற்கொலையாம். சந்தையிலை கத்தரிக்காய் மலிஞ்சுதோ இல்லையோ? தற்கொலை நாட்டிலை மலிஞ்சிட்டுது. இப்ப இரண்டு மூண்டு நாளைக்குள்ளை எத்தினை தற்கொலை. அதுவும் யாழ்ப்பாண ஏரியாவிலை பட்டுப் பட்டெண்டு.. கிரிக்கெட் மச்சிலை அடுத்தடுத்து விக்கற் விழுந்தமாதிரி. எனக்கு அதை நினைச்சால் இராமுழுக்க நித்திரையும் இல்லை.

ஒரு பாடசாலை அதிபர் எல்லாருக்கும் முன்மாதிரியா இருக்க வேண்டிய ஆள், குடுத்த கரைச்சலாலை மனம் நொந்துபோய் ஒரு ரீச்சர் தற்கொலையாம். முந்திக் கிறீஸ் பூதம். பிறகு அது மாதிரி பள்ளிக்கூடத்து வாத்திமார் பெண் பிள்ளையளைப் பிடிச்சுக் "கீச்சு மாச்சு" எண்டு பேப்பரிலை செய்தி வர, அது கிறீஸ் பூதக் கதையிலும் விட மோசமாப்போச்சுது. அது ஒரு மாதிரி பிரச்சினைப்பட்டுப் பிச்சுப் பிடிங்கி ஒரு தீர்வுக்கு வர இப்ப இந்தத் தற்கொலைப் பிரச்சினை. நுண்கடன் குடுக்கிற கொம்பனியளாலையும் கனபேர் தூக்குப் போட்டவை. மருந்து குடிச்சவை. மண்ணெண்ணெயை ஊத்திக் கொளுத்திச் செத்தவையும் இருக்கினம்.

இப்ப செத்த ரீச்சர் பல காலமா அந்த அதிபராலை நெருக்குவாரப்பட்டவராம். படு மோசமா பழி வாங்கினபடியாலைதானே செத்தவ. அந்த ரீச்சர் கன தரம் போய் அவவின்ரை பெரிய ஆக்களிட்டை முறைப்பட்டும் பிரயோசனமில்லாமல் போச்சுது. அவவிட்டைப் படிச்ச பிள்ளையள் சொல்லுதாம் "ரீச்சர் நல்லவ. அவவின்ரை மரணம் எங்களுக்குப் பெரும் இழப்பு" எண்டு.

காலமை பேப்பர் கடையடியிலை சின்னத்துரையும் சொன்னவர் இலங்கையிலை படுமோசமான அரச திணைக்களத்திலை வட மாகாண கல்வித் திணைக் களந்தான் படுமோசம் எண்டு ஆக்கள் கதைக்கினமாம். அதிகார துஷ்பிரயோகமும் அங்கைதான் கூடவாம்.

சும்மா ஒண்டிரண்டு பிள்ளையள் முதலாவதா வந்திட்டினம், கூடின மாக்ஸ் எடுத்திட்டினம் எண்டிட்டு சொல்லுறதே சாதாரண தரப் பரீட்சையிலை வட மாகாணம் தரங் கூடிப்போச்செண்டு. இந்த முறை சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் வட மாகாணத்திலை படு மோசம் எண்டு கதைக்கினம். பள்ளிக் கூடத்திலை வாத்திமாரும், ரீச்சர் மாரும் தங்களுக்குள்ளை கொழுத்தாடு பிடிச்சுக் கொண்டு நிண்டு, யாரி பாக்கிறதாலை பிள்ளையளின்ரை படிப்பை ஆர் பாக்கிறது. வாத்திமாரின்ரை கவனத்தாலை மேலை வந்த பள்ளிக்கூடங்களும் இருக்கு. அவையின்ரை கவனக்குறைவாலை கீழை போன பள்ளிக்கூடங்களும் இருக்கு.

கல்வித் திணைக்களந்தான் எல்லாத்துக்கும் பொறுப்பு. அவையிலை நம்பிக்கை வைச்சுத்தான் பெற்றார் பிள்ளையளை படிக்க எண்டு அனுப்பினம். இது பாத்தால்....???

- வில்லங்கம் விநாசி

# கட்சி மாறமாட்டேன்

## மகிந்த அமரவீர சூளுரை



கொழும்பு, மே 14

"நான் அரசியலுக்கு வந்து 28 வருடங்கள் கடந்து விட்டன. இந்தக் காலம் முழுவதும் ஒரே கட்சியில் இருந்து செயற்பட்டதன் காரணமாகவே மக்கள் என் மீது நம்பிக்கை வைத்துள்ளனர். இதனால் கட்சி மாறும் கதைக்கே இடமில்லை" என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரான அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

"அரசாங்கத்தில் இருந்து வெளியேறிய 16 பேர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து விலக மாட்டார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது. சிலர் என்மீது குற்றஞ்சுமத்துகின்றனர். நான் அரசியலுக்கு வந்து 28 வருடங்கள் கடந்து விட்டது. ஒரே கட்சியில் இருந்து செயற்பட்டதன் காரணமாகவே மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியில் இணையும் எந்த எதிர்பார்ப்பும் என்னிடம் இல்லை. அதேபோல் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் நான் செல்லப் போவதில்லை. தொடர்ந்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தே செயற்படுவோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆட்சியமைக்கும் இயலுமை உள்ளது. 2020ஆம் ஆண்டு அரசியலில் இருந்து ஓய்வுபெற போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். மைத்திரிபால சிறிசேன அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார். மைத்திரிபால சிறிசேனவே சிங்கள, தமிழ், முஸ்லிம் என அனைத்து மக்களின் நம்பிக்கை வென்றுள்ள ஒரே தலைவர்" எனவும் மகிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார். (அ)

# நீர்வீழ்ச்சிக்கு அருகே போகாதீர்!



கொழும்பு, மே 14

இலங்கையில் சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரும் இலங்கையின் மிக உயரமான நீர்வீழ்ச்சியான பம்பரக்கந்தை நீர்வீழ்ச்சியில் அதிக நீர் பாய்வதனால் சுற்றுலாப் பயணிகள் அருகில் சென்று பார்வையிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என ஹல்துமுல்ல பிரதேச சபையின் ஊடாக நீர்வீழ்ச்சிக்கு பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பண்டாரவளை, பதுளை, ஹல்துமுல்ல போன்ற பகுதிகளில் தற்போது நிலவும் அடைமழை காரணமாக பம்பரக்கந்தை நீர்வீழ்ச்சியில் பெரியளவில் நீர் பெருக்கெடுக்க ஆரம்பித்துள்ளது.

இதன்காரணமாக சுற்றுலாப் பயணிகள் அருகில் சென்று பார்வையிடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என அந்த உத்தியோகத்தர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# மின் கட்டணம் உயராது



கொழும்பு, மே 14

எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டாலும், மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது என மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

"உலக சந்தையில் எரிபொருட்களின் விலைகள் சடுதியாக அதிகரித்துக் காணப்பட்டாலும், மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதில்லை என்ற தீர்மானத்தை அரசாங்கம் எடுத்துள்ளது.

இதனால் மின் கட்டணம் உயருமோ என மின் பாவனையாளர்கள் அச்சம்கொள்ளத் தேவையில்லை .

அரசாங்கம் மக்களுக்கு எப்பொழுதும் அதிகபட்ச சலுகைகளை வழங்குவதற்கே எதிர்ப்பார்த்துள்ளது" என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அபராதம்

கொழும்பு, மே 14

அண்மையில் நிறைவடைந்த சிவனொளிபாத மலை பருவக்கால யாத்திரையின் போது, நுகர்வுக்குப் பயனற்ற பொருட்களை விற்பனை செய்த வர்த்தகர்கள் 20 பேருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தகர்களுக்கு விதிக்கப்பட்ட அபராத தொகை ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லதண்ணி - சிவனொளிபாத மலை முதல் மஸ்கெலியா - நிசங்க உயன வரையானப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட 32 சுற்றிவளைப்புக்களின் போதே, இந்த சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, மஸ்கெலிய பொது சுகாதார பரிசோதகர் அமில சோமதாஸ தெரிவித்துள்ளார். (அ)

# வெள்ளத்தில் சிக்கி சிறுமி சாவு

கொழும்பு, மே 14

பசறை - தெமவெலகம பிரதேசத்தில் கனமழையால் உருவான, திடீர் வெள்ளத்தில் சிக்கி 10 வயதான மாணவி உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மெதவெலகம பாடசாலையில் 5ஆம் தரத்தில் பயின்று வந்த ரஸ்மிதா ரஸ்மீ தாரா என்ற மாணவியே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். மாணவி புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பான வகுப்புக்கு சென்றுவிட்டு தாயாருடன் நேற்று முன்தினம் வீடு திரும்பிக்கொண்டிருந்தார். அப்போது அவர்கள் சென்றுகொண்டிருந்த குறுக்கு பாதையில் திடீரென வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் தாயும் மகளும் வெள்ளத்தில் சிக்கினர். பிரதேசவாசிகள் தாயை மீட்ட போதிலும் சிறுமி உயிரிழந்துவிட்டதாகப் பொலிஸார் கூறியுள்ளனர். (அ)

# பிரதான கட்சிகளை இணைக்க தரகராக மாறிய அமைச்சர் ராஜித



கொழும்பு, மே 14

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து எதிர்வரும் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன இந்த விடயம் குறித்து கலந்துரையாடியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது இரு கட்சிகளும் தனித்தனியே போட்டியிட்டு தோல்வி அடைந்த விடயத்தை, இரு கட்சிகளின் தலைவர்களிடமும் சுட்டிக்காட்டிய அமைச்சர், எதிர்வரும் தேர்தலில் ஒன்றிணைந்து போட்டியிட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் பிரதமரோ அல்லது ஜனாதிபதியோ இந்த விடயம் தொடர்பில் தீர்க்கமான பதில் எதனையும் வழங்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

## தொடர்ச்சிகள்

### நிராகரித்தார்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினராகும் எண்ணம் தமக்கு இல்லை என்றும், வடக்கு மாகாண மக்களுக்கு பணியாற்றவே தாம் விரும்புவதாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமைக்கு அவர் கூறியிருக்கிறார் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் பதவிக்காலம், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நிறைவடையவுள்ள நிலையில், அவருக்கு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற ஆசனத்தை வழங்க கூட்டமைப்பு தலைமை விருப்பம் வெளியிட்டதாக கூறப்படுகிறது.

எனினும், இதுபற்றி எந்த அதிகாரபூர்வ அறிவிப்புகளும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### முள்ளிவாய்க்கால்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நினைவேந்தல் நிகழ்வு தொடர்பான பணிகளை வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் எதிர்வரும் 16ஆம் திகதி நேரடியாக சென்று பார்வையிடவுள்ளார்.

இறுதி யுத்தம் இடம்பெற்று பல்லாயிரக்கணக்கான மக்கள் கொன்று குவிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் மண்ணில் வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நான்காவது தடவையாக இந்நினைவு நாள் அஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதன்படி இந்நினைவு நாளின் ஏற்பாடுகள் தொடர்பாக, வடக்கு மாகாணசபையின் முள்ளிவாய்க்கால் நினைவு நாள் ஏற்பாட்டுக் குழுவானது நேற்றைய தினம் காலை நேரடியாக சென்று ஆராய்ந்திருந்தது.

அந்தவகையில் இம்முறை முள்ளிவாய்க்கால் மண்ணில் நினைவு நாள் நிகழ்வானது காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதுடன் இதில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த மக்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இம்முறைவடக்குகிழக்கிலுள்ளஎட்டுமாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்து ஒவ்வொருவர் வீதமும், வடக்கு கிழக்குக்கு வெளியே கொல்லப்பட்ட தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி ஒருவருமாக ஒன்பது பேர் பொதுச் சுடரை ஏற்றவுள்ளதுடன் இச் சுடர்களை வடக்கு மாகாண முதலமைச்சர் சுடர்களை ஏற்றுபவர்களுக்கு எடுத்துக்கொடுக்கவுள்ளார்.

அதனை தொடர்ந்து ஏற்கனவே தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள 1500 அஞ்சலி சுடர்கள் கலந்துகொண்டிருக்கும் மக்களால் ஏற்றி வைக்கப்படவுள்ளன.

மேலும் அஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ள களத்தில் பொது மக்களுக்கான கொட்டைகைகள், தண்ணீர்ப் பந்தல்கள் மற்றும் அவர்களுக்கான ஏனைய வசதிகள் தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு பொது அமைப்புக்கள் பல முன்வந்துள்ளன. அத்துடன் மைதான ஒழுங்கமைப்புக்களை முன்னாள் போராளிகள் மேற்கொள்ளவுள்ளனர்.

இதேவேளை யாழ்.பல்கலைகழக மாணவர்களும் வடக்கு மாகாண சபையுடன் இணைந்து இம் மே 18 அஞ்சலி நாள் நிகழ்வுகளை நடாத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள் என தாம் நம்புவதாக தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், ஆனால் இதுவரை திட்டவட்டமான முடிவு எதுவும் பல்கலைகழக மாணவர் தொடர்பில் எட்டப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### அரசின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்தால் தாம் கைவிடப்படுவதாக வடக்கு தமிழர்கள் நினைக்கின்றனர்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்து மூன்று ஆண்டுகள் ஆகியுள்ளன. அரசாங்கம் பதவிக்கு வருவதுக்கு தமிழ் மக்களின் ஆதரவே காரணமாகும். ஆனால் இந்த மூன்று வருட காலத்தில் தாம் ஏமாற்றப்பட்டதாகவும் தவறாக வழி நடத்தப்பட்டதாகவும் மக்கள் உணருகின்றனர். அத்துடன் தமிழரின் பிரச்சினையை அரசாங்கம் இரண்டாம் நிலைக்கு தள்ளி வைத்துள்ளது.

அரசாங்கம் வடக்கில் முக்கியமான விடயங்களை கூட சரியாக செயற்படுத்தவில்லை. குறிப்பாக காணி விடுவிப்பில் கூட அது சரியாக செயற்படவில்லை.இதற்கு சிறந்த உதாரணம் இரணைதீவு. அந்த மக்கள் எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றி தற்போது உள்ளனர்.எனவே அரசாங்கம் அடிப்படை வசதிகளைக்கூட ஏற்படுத்தி கொடுப்பதில் தோல்வியையே சந்தித்துள்ளது.

போர் முடிவுக்கு வந்து பத்து ஆண்டுகள் ஆகின்ற நிலையிலும் மக்கள் தொடர்ந்தும் இன்னல்களையே அனுபவித்து வருகின்றனர். எனவே அரசாங்கம் மக்களின் உணர்வுகளை புரிந்து நடக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### பொருத்தமானவர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருத்தமானவர் என்று, அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கூட்டு அரசாங்கத்தில் அங்கம் வகித்து , அண்மையில் எதிர்க்கட்சியில் அமர்ந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான ஜோன் செனவிரத்ன, தாம் அரசாங்கத்தில் இருந்து விலகிய போதும், கட்சியில் இருந்து விலகவில்லை என குறிப்பிட்டார்.

கோத்தாபய ராஜபக்சவும் பங்கேற்ற நிகழ்விலேயே, அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

### காணாமல்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னாரில் நேற்றுமுன்தினம் காணாமல் போனோர் அலுவலகம் நடாத்திய முதலாவது சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர். காணாமல் போனோர் அலுவலக தலைவர் சாலிய பீரிஸ் தலைமையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இதில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டம் கடைசிவரை இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டில் இருந்த மாவட்டமாகும்.இந்த மாவட்டத்தில் காணாமற் போனவர்களை விடுதலைப் புலிகள் கடத்தியிருக்க வாய்ப்பே இல்லை. கடலுக்குள் சென்றவர்களை கடற்படையே கடத்தியது. ஏனெனில் கடற்பாதுகாப்பு முழுவதும் கடற்படையே மேற்கொண்டு வந்தது.

அதேபோன்று வீடுகளுக்குள் நித்திரையில் இருந்த எமது பிள்ளைகளை மோட்டார் சைக்கிளில் வந்த இராணுவத்தினரே கடத்தினர். ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்குள் மூன்றுக்கும் மேற்பட்ட தடை முகாம்கள் உள்ளன. இதற்குள் புலிகள் வந்து எப்படி எமது பிள்ளைகளை கடத்த முடியும்.

அத்துடன் எமது உறவுகளை கடத்திய இராணுவத்தினரை நாம் அடையாளம் கண்டுள்ளோம். அவர்கள் எமது உறவுகளை பிடித்ததை ஒத்துக் கொண்டனர். அவர்களை விசாரணையின் பின்னர் விடுவிப்பதாக எம்மிடம் தெரிவித்தனர். ஆனால் இரண்டு, மூன்று மாதங்களின் பின்னர் அவர்கள் எமது உறவுகளை பிடிக்கவில்லை என்றனர். முதலில் பிடித்தனர் என்றனர். பின்னர் பிடிக்கவில்லை என பொய் சொன்னமை ஏன்?

எனவே எமது பிள்ளைகள் எங்குள்ளனர் என்பது கடத்திய இராணுவத்துக்கும், கடற்படைக்கும் ஏன் அரசுக்கும் கூடத் தெரியும்.

எனவே காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு படையினரும், அரசுமே பொறுப்பு என்பதனை ஒத்துக்கொண்டாலேயே நாம் காணாமல் போனோர் அலுவலகம் மீது நம்பிக்கை வைக்க முடியுமென அவர்கள் தெரிவித்தனர்.

### அரசிலிருந்து... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மைய அமைச்சரவை மாற்றம் தொடர்பிலும் தாம் திருப்பதியடையவில்லை எனவும் இது நாட்டுக்கோ, மக்களுக்கோ எவ்வித நன்மையையும் அளிக்கப்போவதில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையிலிருந்து விலகிய சுதந்திக்கட்சியின் 16 பேரது வெற்றிடத்துக்கு நியமிக்கப்பட்ட அமைச்சுப் பதவிகளில் பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரசாங்கத்திலிருந்து ஐ.தே.க விலக வேண்டும். இது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தொடர்ச்சியாக அழுத்தங்களைப் பிரயோகிப்போம். அதன்மூலம் ஐ.தே.க தலைமையிலான அரசாங்கத்தை அமைக்கச் செய்வோம்.

அடுத்த இரண்டு மாதங்களுக்குள் அரசாங்கத்திலிருந்து ஐ.தே.க விலகவேண்டும். தவறின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திலிருந்து எதிரணியில் சுதந்திரமாக அமர்வதுடன் அரசின் செயற்பாடுகளையும் விமர்சிப்போம் என தெரிவித்தார்.

ஏற்கனவே சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் தேசிய அரசாங்கத்திலிருந்து சுதந்திரக்கட்சி வெளியேற வேண்டுமென தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### அன்னையர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விஜய் நற்பணிமன்ற இளைஞர்களின் பங்களிப்புடன் வவுனியா கந்தசாமி ஆலயத்தில் இடம்பெற்ற வழிபாடுகளைத் தொடர்ந்து பசார் வீதி வழியாக சென்ற கவனயீர்ப்பு ஊர்வலம், ஹொரவப்பொத்தானை வீதியை அடைந்து அங்கிருந்து கண்டி வீதி வழியாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்ட தளத்தை வந்தடைந்தது.

இதன்பின் மனிதச் சங்கிலிப் போராட்டம் இடம்பெற்றது. இதன்போது கருத்து தெரிவித்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், இன்று (நேற்று) உலக அன்னையர் தினம். எல்லா அன்னையர்களுக்கும் தமது பிள்ளைகள் வாழ்த்துக்களை தெரிவிக்கிறார்கள். ஆனால் நாம் எமது பிள்ளைகளை தேடிக் கொண்டிருக்கின்றோம். எமக்கு அந்த பாக்கியம் கிடைக்கவில்லை என கண்ணீர்விட்டு அழுதனர்.

விஜய் நற்பணி மன்ற உறுப்பினர்கள் கருத்து தெரிவிக்கையில், இந்த தாய்மாரின் வேதனை புரிகிறது. அன்னையர் தினத்தில் நாம் எல்லோரும் ஒன்று கூடி இந்த தாய்மாரின் போராட்டத்துக்கு நீதி கிடைக்க வேண்டும் என குரல் கொடுத்துள்ளோம். இவர்களுக்கு அவர்களது பிள்ளைகள் கிடைக்க வேண்டும் எனத் தெரிவித்தனர்.

இதேவேளை, போதையற்ற தேசத்தை கட்டியெழுப்புவோம் எனவும் இதன்போது அன்னையர்கள் முன்னிலையில் இளைஞர்கள் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

### அரசாங்கத்தின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாத்திரமல்ல முழு தெற்காசியாவிலும் நடந்த மிகப் பெரிய மோசடி. இதன் மூலம் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டது.

பிரதமருக்கும் தற்போதைய அரசாங்கத்துக்கும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரனை இலங்கைக்கு கொண்டு வரும் தேவையில்லை.

தற்போதைய அரசாங்கம் மாறி மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் மக்களுக்கு நியாயத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### பஸ் கட்டண... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த சங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த கட்டணத்தை மே மாதம் 15 திகதி முதலில் இருந்து அமுலுக்கு கொண்டுவரும் விதத்தில் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஜனாதிபதி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை நடாத்துவதற்கான அழுத்தத்தை அரசாங்கத்துக்கு வழங்க வேண்டியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இதுவே எம்முன் உள்ள பிரதான பணி எனவும் தெஹிவளையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் கூறியுள்ளார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் ஜனாதிபதி வேட்பாளரை தீர்மானிக்கும் அதிகாரம் மஹிந்த ராஜபக்ஷவுக்கே உரியது என நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### கைதான... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல் வெளியிடப்பட்டது.

எனினும் மலேசியாவில் தேர்தலுக்குப் பின்னர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதால், தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை அங்குள்ள இலங்கை தூதரக அதிகாரிகளால் சந்திக்க முடியவில்லை.

இன்று அவர்களுடனான சந்திப்புக்கு ஒழுங்கு 'செய்ய முடியும் என்று நம்புவதாக வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் குறிப்பிட்டார்.

### 'குறூப் 16'க்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் செயற்பாட்டை முன்னெடுக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை அரசாங்கத்தில் இருந்து விலகியுள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களால், கூட்டு எதிரணியில் பிளவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த 16 நாடாளுமன்ற உறுப்பினர்களையும், ஒன்றிணைந்த எதிரணியில் இணைத்துக் கொள்வதுக்கு எதிராக அவ்வணியின் உறுப்பினர்கள் சிலர் போர்க்கொடி உயர்த்தியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் பலத்தை குறைக்க வேண்டும் என்பதில் ஒன்றிணைந்த எதிரணியினர் உறுதியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மியன்மார் மோதல்: 19 பேர் உயிரிழப்பு

மியன்மார், மே 14

மியன்மாரில் இராணுவத்துக்கும், ஆயுதம் ஏந்திய இனக் குழுவுக்கும் இடையே நடந்த மோதலில் 19 பேர் பலியாகினர்.

இதுகுறித்து ஏஎஃப்பி வெளியிட்ட செய்தியில், "மியன்மாரில் வடக்கு ஷான் மாகாணத்தில் அந்நாட்டின் இராணுவத்துக்கும் ஆயுதம் ஏந்திய டாஆங் இனக் குழுவுக்கும் இடையே நேற்றுக் காலை 5.30 மணியளவில் நடந்த மோதலில் 19 பேர் கொல்லப்பட்டனர். 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்" என்று கூறியுள்ளது.

இதற்கு மியன்மார் இராணுவத் தரப்பில், "இராணுவத்துக்கு எதிராகத் தாக்குதலில் ஈடுபட்ட இனக்குழுக்கள் ரோஹிங்கியா முஸ்லிம்களுக்கு எதிராகப் பிரசாரத்தில் ஈடுபட்டனர்" என்று குற்றம் சாட்டியது.



இந்தத் தாக்குதல் குறித்து, வலதுசாரிகள் கூறுகையில், "சீனாவின் எல்லைக்கு அருகே உள்ள வடக்கு மியன்மாரில் சமீபத்திய மாதங்களில் இராணுவத்துக்கும் இனக் குழுக்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. ரோஹிங்கியா குறித்து சர்வதேச சமூகம் அதிகம் கவனம் செலுத்தியதால் இந்தத் தாக்குதல்கள் வெளிச்சம் பெறவில்லை" என்று கூறியுள்ளனர்.

மியன்மாரில் ராக்கைன் மாவட்டத்தில் ரோஹிங்கிய முஸ்லிம்கள் சிறுபான்மையினராக உள்ள பகுதிகளில், மியன்மார் அரசுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் மீது கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் மியன்மார் அரசு இராணுவ நடவடிக்கையில் இறங்கியது.

இதில் போராட்டக்காரர்கள் உட்பட பொதுமக்களும் பாதிக்கப்பட்டனர். சுமார் 5 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் அகதிகளாக வங்கதேசத்துக்கு இடம்பெயர்ந்தனர். இந்த நிலையில் அங்கு மீண்டும் இனக் குழு மற்றும் இராணுவத்துக்கு இடையே மோதல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அடடா, இதுவல்லவா படம்!




சென்னை, மே 14

தமிழ் சினிமாவில் முன்னணி இயக்குநராகத் திகழ்ந்தவர் லிங்குசாமி. இவர் தற்போது விஷாலை வைத்து சண்டக்கோழி -2 படத்தை எடுத்து வருகிறார். இந்த நிலையில் கீர்த்தி சுரேஷின் நடிகையர் திலகம் படத்தை பார்த்துவிட்டு கீர்த்தி சுரேஷை அவர் புகழ்ந்து தள்ளியுள்ளார்.

"நடிகையர் திலகம் ஒரு அற்புதமான மனதை வருடும் படம். நாயகன் படத்துக்கு பிறகு நான் பார்த்த சிறந்த படம், கிட்டத்தட்ட படம் பார்த்து 2 மணி நேரம் ஆகிவிட்டது, ஆனால் அதிலிருந்து இன்னும் மீண்டுவர முடியவில்லை.

சாவித்திரியாக கீர்த்தி சுரேஷ் வாழ்ந்துள்ளார் என்று தான் சொல்ல வேண்டும். அதுமட்டுமில்லாமல் சமந்தா, துல்கர், விஜய் தேவகோரட எல்லாரும் சிறப்பாக நடித்துள்ளனர். இந்த மாதிரியான படத்தை கொடுத்ததற்கு வைஜயந்தி பிலிம்ஸ்க்கு மிகுந்த நன்றி" என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# வாழ்க்கையைத் தேடிய தனுஷ்

சென்னை, மே 14

தனுஷின் ஹோலிவுட் படம், 'வாழ்க்கையைத் தேடி நானும் போனேன்' என்ற பெயரில் தமிழில் வெளியாக இருக்கிறது.

தனுஷ் நடித்துள்ள ஹோலிவுட் படம் 'த எக்ஸார்டினரி ஜேர்னி ஒஃப் த ஃபகிர்'. கென் ஸ்காட் இயக்கியுள்ள இந்தப் படம், ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் தயாராகியுள்ளது. காமெடி அட்வெஞ்சரான இந்தப் படம், வருகிற 30 ஆம் திகதி உலகம் முழுவதும் வெளியாக இருக்கிறது. சோனி பிக்சர்ஸ் நிறுவனம் இந்தப் படத்தை வெளியிடுகிறது.

இதைத் தமிழிலும் வெளியிட விரும்பிய தனுஷ், தயாரிப்பாளர்களிடம் பேசியுள்ளார். அவர்களும் தனுஷின் கோரிக்கையை ஏற்று, தமிழில் வெளியிடுகின்றனர். 'வாழ்க்கையைத் தேடி நானும்போனேன்' என்ற பெயரில் இந்தப் படம் தமிழில் வெளியாகிறது. இதன் முதல் பார்வையை கேன்ஸ் திரைப்பட விழாவில் வெளியிட்டார் தனுஷ்.

'வேலையில்லாப் பட்டதாரி' படத்தில் இடம்பெற்றுள்ள 'ஊதுங்கடா சங்கு' பாடலில் இடம்பெறும் வரி தான் 'வாழ்க்கையைத் தேடி நானும் போனேன்'. தான் எழுதிய இந்த வரியையே தன்னுடைய படத்துக்குத் தலைப்பாக வைத்துவிட்டார் தனுஷ். (அ)

# அணு உலைகளை மூடும் வடகொரியா

வடகொரியா, மே 14

வடகொரியா தலைவர் கிம் ஜாங் உன் - அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் ஆகியோர் ஜூன் மாதம் 12 ஆம் திகதி சிங்கப்பூரில் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளனர்.

இந்நிலையில், வடகொரியாவின் வடகிழக்கில் மண்ட்டாப் மலைப்பகுதியில் உள்ள புங்யேரி பகுதியில் அந்நாடு அணு குண்டுப் பரிசோதனை நடத்தும் மையத்தையும், இதற்காக மலைகளை குடைந்து வெட்டப்பட்டுள்ள இரகசியச் சுரங்கங்களையும் நிர்மூலமாக்கி மூடிவிட வடகொரியா அரசு முடிவெடுத்துள்ளதாக அரசுக்குச் சொந்தமான ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பருவநிலை மற்றும் காற்றின் போக்கு ஆகியவற்றை கருத்தில் கொண்டு வரும் 23 அல்லது 25ஆம் திகதிகளில் இந்த மூடுவிழா நடக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், அந்தப்பகுதியில் உள்ள அணு ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பு மையங்கள், சோதனை மற்றும் பாதுகாப்பு சாவடிகளும் அகற்றப்படும் எனத் தெரியவந்துள்ளது. இந்த நிகழ்வுக்குச் சர்வதேசப் பார்வையாளர்களையும் அழைத்து விழா போன்று நடத்த வடகொரியா முடிவு செய்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

# விரைவில் 'பிக்பாஸ்2'




கடந்த வருடம் விஜய் தொலைக்காட்சியில் பெரும் வரவேற்பைப் பெற்ற 'பிக்பாஸ்' நிகழ்ச்சி, இந்த ஆண்டும் நடைபெறவுள்ளது. இதையும் கடந்த ஆண்டு போல கமலே தொகுத்து வழங்கவுள்ளார்.

நேற்றுமுன்தினம் வெளியான புதிய 'புரமோ'வில் முறுக்கு மீசையுடன் தோன்றும் கமல், கண்களை முடிகொண்டு சொடக்குப் போட்டவண்ணம் மீண்டும் கண்களை திறக்கிறார். ஆரம்பிக்கும் திகதி குறிப்பிடப்படவில்லை விரைவில் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# வர்த்தக யுத்தம் செய்ய மாட்டோம்



பெர்லின், மே 14

ஜேர்மனிக்கான தூதராகப் பொறுப்பேற்றுள்ள ரிச்சர்ட் கிறினில், ஜேர்மனியோடு வர்த்தக யுத்தம் செய்வது அமெரிக்காவின் நோக்கம் இல்லை என்றும் அனைவரையும் சமமாக நடத்தவே டிரம்ப் விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

"ஐரோப்பியப் பொருட்கள் மீது அமெரிக்கா விதிக்க இருக்கும் பெருமளவிலான வரிகள் வர்த்தக யுத்தம் ஒன்றைத் தூண்டுவதற்காக அல்ல. ஜேர்மனியர்கள் மிகச் சிறப்பாக வர்த்தகம் செய்கிறார்கள். நாங்கள் வர்த்தக யுத்தம் செய்யப் போவதில்லை. ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நாங்கள் எங்கள் நண்பர்களுடன் பேசிக்கொண்டிருக்கிறோம் . வரி விதிப்புக்கான கால வரையறை காலாவதியாக உள்ள நிலையில் அதற்குப் பின் என்ன நடக்கும் என்பதைத் தீர்மானிக்கும் முன் ஐரோப்பா என்ன திட்டங்களை முன்வைக்கும் என்பதை அமெரிக்கா பார்க்க விரும்புவகின்றது" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பதவியேற்ற ஒரு வாரத்துக்குள், அமெரிக்க அதிபர் அணு ஒப்பந்தத்திலிருந்து வெளியேறியதாக அறிவித்ததைத் தொடர்ந்து ஈரானிலுள்ள ஜேர்மன் நிறுவனங்கள் இடத்தை காலி செய்யுமாறு கூறியதன்மூலம் கிறினில் , தலைப்புச் செய்திகளில் இடம் பிடித்தார். ஈரான் அணு ஆயுத ஒப்பந்தத்தை மீறியதாக தங்களிடம் ஆதாரம் உள்ளதாகக் கூறியுள்ள அவர் எங்கள் நண்பர்களும் கூட்டாளிகளும் ஈரானை மீண்டும் பேச்சு வார்த்தைகளுக்கு கொண்டு வர உதவுவார்கள் என நம்புகிறோம் என்றும் கூறினார். (அ)

# சிறுவனுக்கு டும்..டும்.டும்!



ஆந்திரா, மே 14

ஆந்திர மாநிலத்தில் 13 வயதுச் சிறுவனுக்கும் 23 வயதான இளம் பெண்ணுக்கும் நடந்த இரகசியத் திருமணம் புகைப்படத்தால் அம்பலமானது. இது குறித்து தற்போது பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

முதற்கட்ட விசாரணையில், அந்தச்சிறுவனின் தாய் நோயுற்று இருப்பதால், தனக்குப் பின் தனது மகனை யாரும் பார்த்துக் கொள்ள மாட்டார்கள் என நினைத்ததால் மகனுக்குத் திருமணம் செய்துவைக்க முடிவு செய்துள்ளார். சொந்த பந்தங்கள் மூலம் 23 வயது பெண் ஒருவரை தேர்ந்தெடுத்துள்ளார்.

தாயின் முழுச் சம்மதத்தோடு திருமணமும் நடந்துள்ளது. திருமண நிகழ்வில் உறவினர்களில் யாரோ ஒருவர் எடுத்த புகைப்படம் சமூக வலைத்தளங்களில் பரவ, பொலிஸார் தாமாக முன் வந்து நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பொலிஸ்விசாரணை குறித்து அறிந்த சிறுவனின் பெற்றோர் மற்றும் உறவினர்களும், பெண் வீட்டாரும் தலைமறைவாகி விட்டனர். பொலிஸார் அவர்களைத் தேடி வருகின்றனர். (அ)

# தேவாலயங்களில் தற்கொலைத் தாக்குதல்

## அதிர்ந்தது இந்தோனேசியா

ஜகார்த்தா, மே 14


இந்தோனேசிய நகரான சுரபயாவில் அமைந்துள்ள தேவாலயங்களில் நேற்று நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் குறைந்தது 9 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஒருசில நிமிட இடைவெளியில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்களில் 40க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இந்தத் தாக்குதல்கள், உள்ளூர் நேரப்படி நேற்றுக்காலை 7.30 மணியளவில் நடைபெற்றுள்ளன.

இந்தக் குண்டுத்தாக்குதல்களை, இஸ்லாமிய அரசு என தங்களை அழைத்து கொள்ளும் ஐ.எஸ் அமைப்பால் ஈர்க்கப்பட்ட ஜெம்மா அன்ஷருட் தவ்லா என்ற குழுவால் நடத்தப்பட்டிருக்கலாம் என இந்தோனேசிய உளவுத்துறை தெரிவித்துள்ளது. (அ)

# பிளே ஓப்ஸ் சுற்றுக்குள் சென்னை சூப்பர் கிங்ஸ்



புனே, மே 14

அம்பதி ராயுடு, வட்சனின் அபார ஆட்டத்தால் ஹைதராபாத்தை துவம்சம் செய்து 2ஆவது அணியாக பிளே ஒப்ஸ் சுற்றை உறுதி செய்தது சென்னை சூப்பர் கிங்ஸ்.

சென்னை சூப்பர் கிங்ஸ் - சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகளுக்கு இடையிலான ஐபிஎல் தொடரின் 46-வது ஆட்டம் புனேயில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற சென்னை சூப்பர் கிங்ஸ் அணித்தலைவர் டோனி பந்து வீச்சை தேர்வு செய்தார். அதன்படி சன்ரைசர்ஸ் ஹைதராபாத் முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கியது. ஷிகர் தவான் (79), கேன் வில்லியம்சன் (51) இருவரதும் ஆட்டத்தால் அந்த அணி 20 ஓவர் முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 179 ஓட்டங்கள் சேர்த்தது.

பின்னர் 180 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் வட்சன், அம்பதி ராயுடு ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். இருவரும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி அரைச்சதம் அடித்தார்கள். சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் ஸ்கோர் 13.3 ஓவரில் 134 ஓட்டங்களாக இருக்கும்போது இந்த ஜோடி பிரிந்தது. 35 பந்தில் 5 பவுண்டரி, 3 சிக்சருடன் 57 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் வட்சன் ரன்அவுட் ஆனார்.

அடுத்து வந்த ரெய்னா 2 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். 3-வது விக்கெட்டுக்கு அம்பதி ராயுடு உடன் டோனி ஜோடி சேர்ந்தார். டோனி நிதானமாக விளையாட அம்பதி ராயுடு அதிரடி ஆட்டத்தை தொடர்ந்தார்.

18ஆவது ஓவரின் 5ஆவது பந்தில் ஒரு ஓட்டம் எடுத்து ஐபிஎல் தொடரில் தனது முதல் சதத்தை பூர்த்தி செய்தார். அப்போது சென்னை சூப்பர் கிங்ஸ் ஸ்கோரை சமன் செய்தது. அடுத்த பந்தில் டோனி ஒரு ஓட்டம் எடுக்க சென்னை சூப்பர் கிங்ஸ் 19 ஆவது ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 180 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அம்பதி ராயுடு 62 பந்தில் 7 பவுண்டரி, 7 சிக்சருடன் 100 ஓட்டங்களுடனும், டோனி 20 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் 12 ஆட்டத்தில் 8இல் வெற்றி பெற்று பிளே ஒப்ஸ் சுற்றை உறுதி செய்தது சென்னை சூப்பர் கிங்ஸ்.

## உதயசூரியனை வீழ்த்தியது நேதாஜி





யாழ்ப்பாணம், மே 14

வல்வை உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி கிண்ணத்தைச் சுவீகரித்தது வல்வை நேதாஜி விளையாட்டுக் கழகம்.

கந்தசாமி குகதாஸ், ஜெயலட்சுமி பார்த்தீபன் ஆகியோரின் ஞாபகார்த்தமாக வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் குறித்த மைதானத்தில் நடைபெற்றது.

இவ்விறுதியாட்டத்தில் வல்வை நேதாஜி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வல்வை உதயசூரியன் விளையாட்டுக்கழகம் மோதியது.

மூன்று சுற்றுகளைக்கொண்ட இவ்விறுதியாட்டத்தில் 25:15 25:17 என்ற புள்ளிகளைப் பெற்று 2:0 என்ற சுற்றுக் கணக்கில் நேதாஜி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று சம்பியனாகியது. (ஐ-66)

## கரவெட்டி இளைஞர் கழக கிரிக்கெட்: பெண்கள் பிரிவில் இமையாணன் மத்தி அசத்தல்

யாழ்ப்பாணம், மே 14

கரவெட்டி இளைஞர் கழகங்களுக்கிடையிலான பெண்கள் கிரிக்கெட்டில் மீண்டும் சம்பினாகியது இமையாணன் மத்தி இளைஞர் கழகம்.

கரவெட்டி இளைஞர் கழகங்களுக்கிடையிலான பெண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று அல்வாய் மனோகரா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இவ்விறுதியாட்டத்தில் இமையாணன் மத்தி இளைஞர் கழகமும் வதிரி டயமன்ஸ் இளைஞர் கழகமும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய இமையாணன் மத்தி, ஒரு விக்கெட் இழப்புக்கு 75 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக சுஜேந்தினி ஆட்டமிழக்காமல் 55 ஓட்டங்களைச் சேர்த்தார்.

டயமன்ஸ் அணி சார்பாக பந்து வீச்சில் அபி ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

பின்னர் 76 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய டயமன்ஸ் அணி, 5 விக்கெட்டுகள் இழப்புக்கு வெறும் 31 ஓட்டங்களையே பெற்றது. இதன் மூலம் 44 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அவ்வணி சார்பாக சுகிர்தா அதிகபட்சமாக 16 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

மத்தியின் பந்து வீச்சில் தர்சி, சஞ்சிகா, அபி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைச் சாய்த்தனர். (ஐ-66)



இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 14.05.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.